# காணிக்கை தந்தோம் கர்த்தாவே

காணிக்கை தந்தோம் கர்த்தாவே
ஏற்றுக்கொள் எம்மை இப்போதே
கண்கொண்டு பாரும்; கடவுளின் மகனே
காணிக்கை யார் தந்தார் நீர்தானே -( 2 )

**1**
நாங்கள் தந்த காணிக்கை எல்லாம்
இரட்சகர் கொடுத்தது
மேகம் சிந்தும் நீர் துளி எல்லாம்
பூமி கொடுத்தது - ( 2 )
காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
ஆகாயம் மாறும் கடவுளின் மகனே
ஆனாலும் உன் அன்பு மாறாதே

**2**
காணிக்கைதான் செலுத்தி வந்தேன்
கருணை கிடைக்கட்டும்
தேவன் தந்த ஜீவன் எல்லாம்
புனிதம் அடையட்டும் - ( 2 )
என் அண்டை வாரும் பாவங்கள் தீரும்
ஏன் என்று கேளும் இறைவனின் மகனே
எம்மையே காணிக்கை தந்தோமே